பக்கங்கள்:-16

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 16 | சனிக்கிழமை | 02.11.2024 | அதிர்வு 92

## அகப்பட்ட கஞ்சா ஜோடி! மீட்டது 200 ரூபா கோடி!!



200 கோடி ரூபா பெறுமதியான 54 கிலோகிராம் ஹெரோயினுடன் கணவன், மனைவி ஆகியோர் பொலிஸ் 05

### அநுரவின் பயணத்தைப் பார்க்கும்போது



# மீண்டும் ரணில் பிரதமராகும் சாத்தியம்!

### முன்னாள் எம்.பி. ராஜித சுட்டிக்காட்டு

“நாட்டின் கடன்களை மீளச் செலுத்துவது பெரிய விடயமல்ல எனத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தற்போது 98 ஆயிரம் கோடி ரூபா கடன் பெற்றுள்ளார். அரசு இவ்வாறு பயணிக்குமாக இருந்தால் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக வேண்டி வரும்.”

- இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார். 05

# யாழில் ஆறு ஆசனங்களையும் முன்னணி கைப்பற்ற வேண்டும்

### கட்சியின் பொதுச்செயலர் கஜேந்திரன் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் ஆறு ஆசனங்களையும் எமது அணி கைப்பற்ற வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“இம்முறை எமது தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணிக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள். யாழ்ப்பாணம் (யாழ். – கிளிநொச்சி) தேர்தல் மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளை எமது தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு எமது மக்கள் வழங்க வேண்டுமென அன்பாக வேண்டுகின்றேன். 05




யாழ்ப்பாணத்தில் கடந்த 34 வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வயாவிளான் சந்தி – தோலகட்டி சந்தி வரையிலான வீதி நேற்று வெள்ளிக்கிழமை முதல் மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டது.

நேற்றுக் காலை இந்த வீதி திறந்து விடப்பட்ட சமயம், அங்கு முதல் ஆளாகப் பிரசன்னமாகி இருந்தவர்களில் ஒருவர் யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் பேச்சாளருமான எம்.எ சுமந்திரன்.

அந்த நிகழ்ச்சி முடிந்து சற்று நேரத்தில் அவருக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

“நான் சத்தம் சந்தடியின்றி – ஆரவாரம் ஏதுமில்லாமல்–அந்தவீதியைத்திறந்துவிடநடவடிக்கை எடுத்தேன். ஆனால் வீதி திறக்கும் போது முதல் ஆளாக நீங்கள் அங்கு பிரசன்னமாகியிருக்கிறீர்கள். ஆச்சரியமாக இருக்கின்றது.” – என்றார் ஜனாதிபதி. 05

# வன்னித் தேர்தல் மாவட்டத்தில் பதினேழு முறைப்பாடுகள் பதிவு

## மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தகவல்




(கி.வசந்தன்)

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 17 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும், வவுனியா அரச அதிபருமான பீ.ஏ. சரத்சந்திர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இதுவரை வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 17 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் எட்டு முறைப்பாடுகளும், மன்னார் மாவட்டத்தில் எட்டு முறைப்பாடுகளும், முல்லைத்தீவில் ஒரு முறைப்பாடும் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை சிறிய முறைப்பாடுகளாகவே உள்ளன.

அத்துடன் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக வன்னி மாவட்டத்தில் 387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. அந்தவகையில் வவுனியாவில் 182, மன்னாரில் 98, முல்லைத்தீவில் 137 நிலையங்களும் அமைக்கப்படும்.

இதேவேளை, வவுனியாவில் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக சைவப் பிரகாச மகளிர் கல்லூரியும், மன்னார் மாவட்டத்தில் மாவட்டச் செயலகமும், முல்லைத்தீவில் முல்லைத்தீவு மத்திய மகாவித்தியாலமும் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இத்தேர்தலில் 30,6081 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். அந்தவகையில் வவுனியாவில் 128,585 பேரும், முல்லைத்தீவில் 86,889 பேரும், மன்னாரில் 90,607பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். – என்றார்.

# வெளிநாடுகளில் இராஜதந்திரப் பதவிகளில் நியமனம் பெற்ற பலரை மீள அழைக்க முடிவு



குடும்பம் மற்றும் அரசியல் உறவுகளின் அடிப்படையில் கடந்த ஆட்சியில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் நியமிக்கப்பட்ட 16 இராஜதந்திர அதிகாரிகளை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நாட்டுக்கு மீள அழைக். புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த அதிகாரிகளுக்கு இவ்விடயம் குறித்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு அழைக்கப்பட்டவர்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் எனக் கூறப்படும் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அமெரிக்க கொன்சல் ஜெனரல் லலித் சந்திரதாஸவும் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, சீனாவின் ஷாங்காய் நகரில் உள்ள கொன்சல் ஜெனரல் அனுர பெர்னாண்டோ மற்றும் இந்தியாவின் சென்னையில் துணை உயர்ஸ்தானிகராகப் பணியாற்றிய டொக்டர்.டி.வெங்கடேஸ்வரனும் நாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் கொன்சல் ஜெனரலாகப் பணியாற்றிய எஸ்.எம்.ஏ.எவ். மௌலானாவும் அரசாங்கத்தின் மீள அழைக்கும் பட்டியலில் இருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றிய நிஷான் மாணிக் முத்துகிருஷ்ணா மற்றும் மூன்றாவது செயலாளராக கடமையாற்றிய தாரக திஸாநாயக்கவையும் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய இராச்சியத்தின் லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்தில் மூன்றாவது செயலாளராகக் கடமையாற்றிய சேனியா புஞ்சிநிலமேயையும் இலங்கைக்கு திரும்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்தின் மூன்றாவது செயலாளராககடமையாற்றியசஹஸ்ரபண்டார, இத்தாலியின் ரோம் நகரில் உள்ள தூதரகத்தின் மூன்றாவது செயலாளராக கடமையாற்றிய மெல்கி சந்திமா பெரேரா, ஆஸ்திரேலியாவின் கன்பராவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்தின் மூன்றாவது செயலாளராக கடமையாற்றிய தினுகா கார்மலின் பெர்னாண்டோபுள்ளே ஆகியோரை அழைக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில், உறவினர்கள் மற்றும் அரசியல் சார்பு அடிப்படையில் இராஜதந்திர சேவையில் ஈடுபட்டுள்ள மேலும் பலரை அழைக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தென்னிலங்கை ஊடகமொன்று வெளியிட்டிருந்த செய்தியின் அடிப்படையில் இந்தப் பெயர் பட்டியல் தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ஊடக சுதந்திரம் குறித்துப் பேசிய அநுர ஊடகங்களுக்கு அழுத்தம் தருகின்றார்

## ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கண்டனம்







ஜனநாயக நாட்டில் ஊடக சுதந்திரம் முக்கியமானதொரு அங்கமாகும். ஒரு நாட்டின் ஊடகங்கள் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் மிக முக்கியமான தூண்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அன்று ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க ஊடக சுதந்திரத்தம் குறித்து பேசிய விடயங்கள், ஊடக உரிமைகள் மற்றும் பாதுகாப்பிற்காக பேசியவற்றை மறந்து விட்டார் போலும். இன்று அவர் ஜனாதிபதியாகி ஊடகங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க முற்படுகிறார். ஜனநாயகம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்தும் அவர்கள் ஆலோசனை வழங்குகிறார்கள். நமது நாட்டின் ஊடகத்துறைக்கு தற்போதைய ஜனாதிபதியோ அல்லது அரசியல்வாதிகளோ ஊடக சுதந்திரம் குறித்து ஆலோசனை வழங்கத் தேவையில்லை. ஜனநாயகத்தின் முக்கிய தூணாக விளங்கும் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார்.

ஊடக சுதந்திரம் மற்றும் ஒழுக்கக் கோவை பேணப்பட வேண்டும். ஆனால் அது ஊடகங்களால் உருவாக்கப்பட்ட சுய கட்டுப்பாடு முறையின்படி அமைந்து காணப்பட வேண்டும். ஊடகங்களைஜ் கட்டுப்படுத்த சட்டங்களை இயற்றுமாறு ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ ஆலோசனை வழங்குவது, கண்டிப்பது ஊடக சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் விடுக்கப்பட்ட மரண அடியாகும். ஊடகத்தைக் கண்டித்து அறிவுரை வழங்குவதை தவிர்க்குமாறு ஜனாதிபதி அநுர குமர திஸநாயக்கவிடம் கேட்டுக் கொள்கிறேன். ஊடகங்களின் கட்டுப்பாடு, சுயநிர்வாகம் என்பன ஊடகங்களுக்கே உரித்தான வேலை. – என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2024 பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு மத்திய கொழும்பு மக்களுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாஸ தலைமையில் இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய கொழும்பு தேர்தல் தேர்தல் தொகுதி அமைப்பாளர் முஜிபுர் ரஹ்மானால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்திக்கும் எனக்கும் ஊடகங்களில் இருந்து விமர்சனத் தாக்குதல்கள் பரவலாக இடம்பெற்றன. என்றாலும் நான் ஒருபோதும் ஊடகங்களுக்கு எதிராக செயல்படவில்லை. அவ்வாறு செயல்படுவதற்கு எந்த உரிமையும் இல்லை என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். மறுபுறம் எதிர்க்கட்சியொன்று தேவை இல்லை, அரசாங்கம் மட்டும் இருந்தால் போதும் என்ற கருத்தையும் இன்று முன்னெடுத்து வருகின்றனர். இவை ஜனநாயகத்துக்கு ஆபத்தை விளைக்கும் போக்குகள் ஆகும். எனவே நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க, ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க, இந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்நாட்டு மக்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மையைப் பெற்றுத் தர வேண்டும் என்பதை இங்கு சுட்டிக்காட்டுகின்றேன். என அவர் மேலும் தெரிவித்தார்.







# முருகப் பெருமானை விசேடமாக வணங்கி வழிபடும் விரதம் கந்தசஷ்டி!

ஐப்பசி மாதத்து தீபாவளி அமாவாசையை அடுத்து அதாவது வளர்பிறையில் பிரதமை தொடக்கம் சஷ்டி வரையுள்ள ஆறு தினங்களும் முருகப் பெருமானை விசேடமாக வணங்கி நோற்கும் விரதம் கந்த சஷ்டி ஆகும்.

செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப்பேறு என்பவற்றை முன்னிட்டு முருகனைக் குல தெய்வமாகவோ இஷ்ட தெய்வமாகவோ, வழிபடுவோரும் பிறரும் இந்த விரதத்தை அனுஷ்டிப்பர். தீவிர முருக பக்தர்கள் இவ்விரதத்தை ஒரு கடுந் தவமாகக் கருதி ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல் வழக்கம்.

இதனை அதுசரிக்க இயலாதவர் ஐந்து தினங்கள் ஒரு வேளை உண்ணுதலும் ஆறாம் நாள் உபவாசம் இருத்தலும் நடைமுறையாக உள்ளது.

அமாவாசை தினத்தில் ஒரு வேளை உணவுண்ணல் தொடக்க தினத்தில் ஆலயத்தில் தர்ப்பையணிந்து "காப்புக் கட்டல்" அதாவது சங்கற்பம் செய்தல் ஆறு தினங்களும் முருகன் ஆலயத்தில் இறை வழிபாடு, புராணப் படனம், போன்ற புனிதச் செயல்களில் ஈடுபடல். இறுதிநாளில் காப்பை அவிழ்த்து தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பித்தல்.

ஏழாம் நாள் அதிகாலை நீராடி அனுஷ்டானங்களை நிறைவேற்றி, பாரணைப் பூஜை முடிவுற்றதும் மாகேசுர பூஜை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்தல் என்பன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவையாகும்.

கந்தசஷ்டி என்பது முருகப் பெருமான் சூர சங்காரம் செய்து தேவர்களைக் காத்த அருட் செயலைக் குறிக்கும். இவ்விரதத்தின் ஆறாம் நாள் முருகன் ஆலயங்களில் "சூரன் போர்" என்னும் சமய நிகழ்வு நாடக பாணியில் நடைபெறுதல் வழக்கம்.

மனிதர்களின் உட்பகையாக உள்ள காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை ஆகிய அசுரப் பண்புகளை அழித்து அவர்கள் தெய்வீக நிலையில் பெருவாழ்வு வாழ அருள் பாலிக்கும் இறைவன் ஆற்றலின் பெருமை கந்தசஷ்டி உணர்த்தும் மெய்ப்பொருள் ஆகும்.

கந்தசஷ்டி விரதத்தின் மகிமையையும், பயனையும் கூறும் பின்வரும் பாடல் படிப்பதற்கு ஏற்றதாகும்.

ஆரண முனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல் சீரணி முருக வேட்குச் சிறப்போடு பூஜை ஆற்றிப் பாரணம் விதியிற் செய்தார் பயிற்றும் இவ்விரதம் தன்னால் தாரணி அவுணர் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்.

கந்தசஷ்டியை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள முருகன் ஆலயங்கள் மற்றும் ஆலயங்களில் விசேட அபிஷேகம், பூஜைவழிபாடு இடம்பெற்று ஆறாவது நாள் 'சூரன் போர்' நிகழ்வு இடம் பெறுவது வழமை.

# கந்தனும் வந்தான்...!

( முதலாம் நாள் )

சிவனின் சிந்தையில் தோன்றிய சிந்தனை
கனற் பொறியாயாகிக் கந்தனாய் வந்தது
சினத்தை முதலாய் கொண்ட அசுரர்
பலத்தை கந்தன் அடக்கவே வந்தான்

அசுரர் அளவிலா வரத்தைப் பெற்றனர்
கிடைத்த வரத்தை கீழாய் ஆக்கினர்
கொடிய உள்ளம் நெடிதாய் எழுந்தது
கொடுமை எங்கணும் விரிந்து பரந்தது

பக்தியை அசுரர் பழித்துமே நின்றனர்
பரமனை எதிர்த்திட துடித்துமே நின்றனர்
சக்தியின் உருவாய் கந்தனும் வந்தனன்
மொத்தமாய் அசுரர் முடங்கியே போயினார்

ஆணவம் அழிந்தது அசுரர் அடங்கினர்
அரனின் சக்தியாய் கந்தனே எழுந்தான்
பூதலம் எங்கணும் பொழுதுமே விடிந்தது
சோதனை வேதனை துடைத்தனன் கந்தனும்

பக்தியை மிதித்தார் பக்தியை அழித்தார்
பழியைத் தாங்கியே படுகுழி வீழ்ந்தார்
பக்தியே கனலாய் எழுத்துமே வந்தது
பரமனின் குமரனாய் கந்தனும் வந்தான்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன்,
ஆஸ்திரேலியா.



# அரசியல் பழிவாங்கல் வேட்டை ஆரம்பம்

## பதறுகின்றார் நாமல்



"எமக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் வேட்டை ஆரம்பமாகியுள்ளது. நாட்டில் சுயாதீன நீதிமன்றக் கட்டமைப்பு இருப்பதால் எமக்குப் பயம் இல்லை." – என்று முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"சிஸ்டர் சேன்ஸ் எனப் பேசப்பட்டாலும், அரசியல் பழிவாங்கலே இடம்பெறுவதைப் போல் தெரிகின்றது. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கும் அதுவே நடந்துள்ளது.

இந்த நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பில் எவரும் கையடிக்க முடியாது. நீதித்துறை சுயாதீனமாக இருக்கின்றது என நம்புகின்றோம். அதனால் அரசியல் பழிவாங்கல் வேட்டைக்கு நாம் அஞ்சவில்லை. விசாரணைகளை எதிர்கொள்ளவும் புலம்பவில்லை.

அதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தீர்க்கமான சக்தியாக உருவாகும். தேர்தலை நோக்கி கட்சியை வழிநடத்த வேண்டும் என்பதாலேயே நான் தேர்தலில் போட்டியிடவில்லை.

ஜனாதிபதித் தேர்தலை விடவும் நாடாளுமன்றத் தேர்தலில் நிலைமை மாறும். எமக்கான ஆதரவு நிச்சயம் அதிகரிக்கும்." என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீதித் திறப்பு பற்றிய நிகழ்வு படங்களை காணொலியாக நேரடியாக அவர் பார்த்திருக்கக் கூடும்.

அவரின் தொலைபேசி அழைப்பில் ஒரு விடயம் தொக்கி நின்றது.

"அந்தப் பிரதேசத்தில் கடந்த 20 வருடங்களாக மக்களின் காணிகளுக்காகவும் பிற பிரச்சினைகளுக்காகவும் நீதிமன்றங்களிலும், வெளியிலும், நாடாளுமன்றிலும் நான் பேசி வருகிறேன். ஆகவே அந்தப் பகுதியில் ஏதேனும் அசுமாத்தம் என்றால் அந்த மக்களிடமிருந்து முதல் தகவல் எனக்குத்தானே வரும்...?" – என்று பதிலளித்தார் சுமந்திரன்.

அதுவல்ல விடயம். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு வேறு அரசியல் சிக்கல். இராணுவத்தினதும் பாதுகாப்புத் துறையினதும் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் இந்த வீதித் திறப்பு நடவடிக்கையை அவர் முன்னெடுத்திருப்பார். அதை சத்தம் சந்தடியின்றி அவர் முன்னெடுக்க, அங்கு சுமந்திரன் பிரசன்னமாகி இருப்பது தெற்கில் தமக்குத் தலையிடி தரும் விவகாரமாகிவிடும் என்ற கவலை ஜனாதிபதிக்கு இருந்திருக்கக் கூடும். அதை நேரடியாக சுமந்திரனிடம் கூறாமல் குறிப்பால் சுட்டிக் காட்டினார் ஜனாதிபதி என்பதை என்னால் புரிந்து கொள்ள முடித்தது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் சுமந்திரனும் கடந்த 15 வருடங்களாக எதிரணியில் ஒன்றாக இருந்து நெருக்கமாகப் பல விடயங்களிலும் இணங்கிப் பணியாற்றியவர்கள் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

\+ + +

பனை அபிவிருத்திச் சபைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டவரின் பண்பியல்பு, போக்கு, நடத்தை, செயற்பாடு போன்றவை பற்றிய மக்கள் கருத்து நிலைப்பாட்டை கடந்த இரண்டு நாள்களாக என் பத்தியில் கோடி காட்டி வந்தேன்.

ஊழலற்ற, நேர்மையான அரசு நிர்வாகத்தைத் தர போகின்றார்கள் எனக் கூறி ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் கட்சியினர், இந்தப் பதவிக்கு இப்படி ஒருவரை நியமித்துத் தங்கள் நோக்கம் தொடர்பில் அவலப்பட்டு போய் நிற்கிறார்கள் என்பதே தமிழ் மக்களின் கருத்து நிலைப்பாடாக இருக்கின்றது.

இது குறித்து தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் சந்திரசேகரன் நேற்று செய்தியாளர் மாநாட்டில் ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கின்றார்.

இதற்கு முன்னர் பனை அபிவிருத்தி சபை சீரழிந்து, நிர்வாகச் சீர்கேட்டுடன் அழிந்து போய் இருந்ததாக அவர் அதில் குறிப்பிட்டு இருக்கின்றார். அதில் மறுத்துரைக்க இடமில்லை.

ஆனால் அதை நேர்சீராக்க நல்ல தலைவர் தேவை என்று கருதி, அதற்காகத்தான் இந்த நியமனத்தை அநுரகுமார திஸநாயக்க செய்திருக்கிறார் என்பது சந்திரசேகரனின் கருத்தாக இருந்தது.

ஆக, அவருக்கும், அவரது ஜனாதிபதிக்கும் இவ்விடயத்தில் ஒன்றை மட்டுமே கூறி வைக்க விரும்புகிறேன். இவ்விடயத்தில் அவர்கள் குளிக்கப் போய் சேறு பூசி இருக்கிறார்கள். அவ்வளவுதான்.

இதை விளங்கிக் கொள்வதும், விளங்காமல் விடுவதும் அவர்களின் அறிவுத் திறமையை பொறுத்தது. விட்டுவிடுவோம்.

---

## அகப்பட்ட கஞ்சா ஜோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

செவனகல நுகேகலய, கிரிவெவ பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் மூன்று விசேட அதிரடிப் பிரிவுகளின் அதிகாரிகள் குழுவொன்று சுற்றிவளைப்பை மேற்கொண்டது.

இந்தச் சுற்றிவளைப்பில் வீட்டின் முன்றலில் புதைக்கப்பட்டிருந்த மூன்று பிளாஸ்ரிக் கொள்கலன்களில் மறைத்து வைத்திருந்த 53 கிலோ 65 கிராம் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் அந்த வீட்டில் வசிக்கும் கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

---

## யாழில் ஆறு ஆசனங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன் எனக்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் விருப்பு இலக்கம் 02. கஜேந்திரனாகிய எனது விருப்பு இலக்கம் 09. மூன்றாவது விருப்பு வாக்கை எமது அணியில் நீங்கள் விரும்பும் ஒருவருக்கு வழங்கலாம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் ஆறு ஆசனங்களையும் எமது அணி கைப்பற்ற வேண்டும்.

தங்களது குடும்பத்தவர்கள், ஏனைய உறவினர்கள். நண்பர்களிடமும் எமக்காக வாக்களிக்குமாறு கோருமாறு அன்பாக வேண்டுகின்றேன்." – என்றுள்ளது.

## மீண்டும் ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,


"எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அரசை விமர்சிக்கலாம். அதிகாரத்துக்கு வந்தால் செய்வதாகப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கலாம். ஆனால், தேர்தல் மேடைகளில் வாய்ச்சவடாலை அரசு செய்ய முடியாது. அது மிகவும் கஷ்டமான தாகும். மக்கள் விடுதலை முன்னணி இவ்வளவு காலமும் அரசை விமர்சித்து வந்து. தற்போது மக்கள் அவர்களுக்கு அதிகாரத்தை வழங்கி இருக்கிறார்கள். அவர்களின் அரசு செய்வதை மக்கள் தற்போது கண்டுகொள்ளலாம்.

அரசின் வெளிநாட்டுக் கடனான 42 பில்லியன் டொலரைச் செலுத்துவது பாரிய விடயமா என அநுரகுமார திஸநாயக்க தேர்தல் மேடையில் தெரிவித்திருந்தார். ஆனால், அரசைக் கொண்டு செல்ல முடியாமல் அவர் தற்போது 98 ஆயிரம் கோடி கடன் பெற்றுள்ளார். அது மாத்திரமல்லாது பணம் அச்சிட்டுள்ளார்கள். ரணில் விக்கிரமசிங்க பணம் அச்சிடாமலே மக்களுக்கு நிவாரணம் வழங்கினார். அரச ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதேபோன்று ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு இந்தளவு வாகனம் எதற்கு என அவர் கேட்டிருந்தார். ஆனால், தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார வரும் போது அவருக்குப் பாதுகாப்புக்காக 6 வாகனங்கள் வருகின்றன. தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்குள் வரும்போது 5 வாகனங்களை வெளியில் நிறுத்திவிட்டு ஒரு வாகனத்திலே வருகின்றார். மக்களை ஏமாற்றுவதற்கே இவ்வாறு செயற்படுகின்றார்கள்.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக அதிகாரத்துக்கு வந்த இந்த அரசு, அதிகாரத்துக்கு வந்து ஒரு மாதம் கடந்தும் எந்த மாற்றத்தையும் செய்ய வில்லை. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைக் குறைப்பதற்கு மாத்திரமே நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். ஆனால், நாட்டை முன்னேற்ற எந்த வேலைத்திட்டமும் இவர்களிடம் இல்லை. அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்களிக்க வெளிநாட்டில் இருந்து வந்தவர்களுக்கு தற்போது கடவுச்சீட்டு இல்லாமையால் திரும்பிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களின் இயலாமையை மக்கள் தற்போது கண்கின்றார்கள். அதனால் அரசு இவ்வாறு பயணிக்குமாக இருந்தால், ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக வேண்டி வரும்." – என்றார்.

# டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் நியமனம்



ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் பிரதான ஆலோசகராக கலாநிதி ஹான்ஸ் விஜயசூரியவை நியமித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துதல், தேசிய போட்டித்தன்மை மற்றும் அனைத்து பிரஜைகளுக்கும் குறிப்பிடத்தக்க நன்மைகளை வழங்கும் எதிர்பார்ப்புடன், பிராந்தியத்தில் மிகவும் முன்னேறிய நாடுகளுக்கு இணையாக இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தமது தொலைநோக்குப் பார்வை மற்றும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில் ஜனாதிபதி இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய துறைகளை உலகத் தரத்திற்கு மேம்படுத்துவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். பிரஜைகளை வலுவூட்டுவதற்காக டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகள் நிறுவுவதன் மூலம் பல்துறை டிஜிட்டல் பரிமாற்றத்திற்கு அரசாங்கம் உறுதியான அர்ப்பணிப்புடன் உள்ளது.

அதன்படி, வேகமான டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு மற்றும் அனைத்து பிரஜைகளினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் வழிவகுக்கும் பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சி தொடர்பான பாரம்பரிய அபிவிருத்தி வாய்ப்புகளை உள்வாங்கக் கூடிய வகையில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கலாநிதி ஹான்ஸ் விஜயசூரியவின் நியமனம் மேலே குறிப்பிட்ட தொலைநோக்குப் பார்வையை அடைவதற்கான ஒரு முக்கிய படியாகும்.

சர்வதேச தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் பிரபலமானவரான கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய, தற்போது ஆசியாடா நிறுவனத்தின் தொலைத்தொடர்பு வணிகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் குழும நிறைவேற்றுப் பணிப்பாளராக பணியாற்றுவதுடன், அவர் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் அந்த பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இந்த காலகட்டத்தில், கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய நிறைவேற்று அல்லாத தலைவராக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு தலைமை வகிப்பார். இதன் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் டிஜிட்டல் பரிமாற்றத்திற்கான குறித்த வேலைத் திட்டங்களைத் திட்டமிடல் மற்றும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும்.

இந்த நியமனத்தின் பின்னர் டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான நிறுவன கட்டமைப்பிற்குள் பல நிறைவேற்றுத் தலைமைப் பாத்திரங்களை அவர் வகிக்க உள்ளார். இதற்கு மேலதிகமாக, ஜனாதிபதியின் விடயப்பரப்பின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்ட அமைச்சான டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளர் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேற்பார்வையிடும் உயர்மட்ட நிறுவனமான டிஜிட்டல் பொருளாதார அதிகார சபையின் தலைவர் ஆகிய இரண்டு பதவிகளையும் அவர் வகிப்பார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



## ராஜகிரிய பகுதியிலுள்ள கட்டடத்தில் தீப்பரவல்!

ராஜகிரிய – மாதின்னாகொட பகுதியில் உள்ள வாகன திருத்தும் நிலையமொன்றில் நேற்று தீப்பரவல் ஏற்பட்டது.

தீயைக் கட்டுப்படுத்துவதற்காக கோட்டை நகர சபையிலிருந்து மூன்று தீயணைப்பு வாகனங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

அத்துடன், 15 தீயணைப்பு படையினர் அனுப்பிவைக்கப் பட்டனர்.

தீயணைப்பு படையினர், பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## பங்குச் சந்தையின் பங்கு பரிவர்த்தனை தொடர்ந்து 9ஆவது நாளாகவும் வளர்ச்சி

கொழும்பு பங்குச் சந்தையின் பங்கு பரிவர்த்தனைகள் தொடர்ந்து 9 ஆவது நாளாக நேற்று வளர்ச்சியை காட்டியுள்ளன.

நேற்றைய வர்த்தக நடவடிக்கைகளின் நிறைவில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணின் பெறுமதி நேற்று முன் தினத்துடன் ஒப்பிடுகையில் 93.7 புள்ளிகளால் அதிகரித்து நேற்று அதன் பெறுமதி 12,863 புள்ளிகளாக பதிவானது.

S&P விலை சுட்டெண்ணின் பெறுமதி 15.77 புள்ளிகளினால் நேற்று அதிகரித்ததுள்ள துடன் அதன் விற்பனை பெறுமதி 3,880 புள்ளிகளாக காணப்பட்டது.



# இந்திய உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியை சந்தித்தார்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்திய உதவியின் கீழ் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இங்கு விரிவான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், அந்தத் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் சவால்கள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இரு நாட்டு மீனவ சமூகங்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு ஒத்துழைப்புத் திட்டத்தின் மூலம் நீண்டகால தீர்வை எட்டுவதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வட மாகாண கடல் பிரதேசத்தில் நிலவும் மீன்பிடி பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், இலங்கை மீனவ சமூகத்தின் நலன்களை பாதுகாப்பதில் தான் எப்போதும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் மின்சக்தி மற்றும் வலுசக்தித் துறையின் மேம்பாடு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு இந்தியாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் இந்திய துணை உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்யஞ்சல் பாண்டேவும் கலந்து கொண்டார்.

# மஹிந்தவின் பாதுகாப்பு குறைப்பு என வெளியான செய்திகள் உண்மையல்ல

## ஜனாதிபதியின் அலுவலகம் கூறுகின்றது

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகம் கவனம் செலுத்தியுள்ளது.

அந்த செய்திகள் அனைத்தும் பொய்யானவை என்றும் 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி அலுவலகம் பின்வரும் பலன்களை அவருக்கு வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவிக்கின்றது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ், ஓய்வு பெற்ற ஜனாதிபதி ஒருவரின் ஓய்வூதியத்துக்கும், கொழும்பு 07, விஜேராம மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் செயலக கொடுப்பனவுக்கும் உரித்துடையவர்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு 03 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளமையுடன், Mercedes Benz -600 maybatch (B/P) car 2008, Toyota Land Cruiser – 2017, Mercedes Benz - G63 AMG 4*4 2850 jeep 2013 ஆகிய 03 வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்காக மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக 1950 லீற்றர் வழங்கப்படுவதுடன், அந்த வாகனங்களுக்காக மூன்று சாரதிகள் வழங்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கான பாதுகாப்பு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படுகிறது. அதற்காக நியமிக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்களில் மூன்று கொமாண்டோ அதிகாரிகள், 37 ஏனைய சிப்பாய்கள் மற்றும் 4 இதர பிரிவு அதிகாரிகளும் 19 இதர நிலைகளும் இருப்பதோடு இவ்வாறு



மொத்தம் 07 இராணுவ அதிகாரிகள் மற்றும் 56 ஏனைய சிப்பாய்களும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ்வின் பாதுகாப்பிற்காக சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு மேலதிகமாக 180 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் 29 பொலிஸ் சாரதிகளும் உள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை மதிப்பிடுவதற்கு தற்போது அமைச்சரவை உபகுழுவும் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் இது தொடர்பில் தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

“நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துளள்ளார்.”

- வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஊடக சுதந்திரம்

ஆட்சி அதிகாரக் கட்டமைப்பு ஒன்று தன் நடத்தையை அடக்கு முறையை நோக்கி - எதேச்சாதிகாரப் பாதையில் - திருப்பும் போது அதன் முதல் அறிகுறி எதுவாக இருக்கும்?

உண்மைகளை மறைத்து, பொய்மைகளை விதைக்கும் போக்குத்தான் அதன் முதல் வெளிப்பாடாக தோன்றும். வெளிப்படும்.

ஆட்சி அதிகாரத்தில் இருப்போர் உண்மைகளை மறைக்கும் முதல் எத்தனமாக ஊடக சுதந்திரம் மீதுதான் கை வைப்பார்கள்.

வரலாறுகள் நமக்கு புகட்டிய அனுபவப் பாடம் அதுதான்.

அந்த ஊடக சுதந்திரத்தில் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா கைவைக்க முயல்கின்றார் என்று குற்றம் சாட்டி இருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

ஊடகங்கள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா அண்மையில் பொதுக் கூட்டம் ஒன்றில் முன்வைத்த காட்டமான விமர்சனங்களே இப்படியான கருத்து நிலைப்பாட்டை உருவாக்கியுள்ளன.

“ஜனநாயக நாட்டில் ஊடக சுதந்திரம் முக்கியமானதொரு அங்கமாகும். ஒரு நாட்டின் ஊடகங்கள் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் மிக முக்கியமான தூண்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை. முன்னர் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க ஊடக சுதந்திரம் குறித்துப் பேசியவற்றையும், ஊடக உரிமைகள் மற்றும் பாதுகாப்பிற்காக பேசியவற்றையும் இப்போது அவர் மறந்து விட்டார் போலும். இன்று அவர் ஜனாதிபதியாகி ஊடகங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க முற்படுகிறார். ஜனநாயகம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்தும் அவர் ஆலோசனை வழங்குகிறார்கள். நமது நாட்டின் ஊடகத்துறைக்கு தற்போதைய ஜனாதிபதியோ அல்லது அரசியல்வாதிகளோஊடகசுதந்திரம் குறித்துஆலோசனைவழங்கத்தேவையில்லை. ஜனநாயகத்தின் முக்கிய தூணாக விளங்கும் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்.” - என்று கூறியிருக்கின்றார் சஜித் பிரேமதாஸ.

“ஐக்கிய மக்கள் சக்திக்கும் எனக்கும் ஊடகங்களில் இருந்து விமர்சனத் தாக்குதல்கள் பரவலாக இடம் பெற்றன. என்றாலும் நான் ஒருபோதும் ஊடகங்களுக்கு எதிராகச் செயல்படவில்லை. அவ்வாறு செயல்படுவதற்கு எந்த உரிமையும் இல்லை.

“ஊடக சுதந்திரம் மற்றும் ஒழுக்கக் கோவை பேணப்பட வேண்டும். ஆனால் அது ஊடகங்களால் உருவாக்கப்பட்ட சுய கட்டுப்பாடு முறையின்படி அமைந்து காணப்பட வேண்டும். ஊடகங்களைக் கட்டுப்படுத்த சட்டங்களை இயற்றுமாறு ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ ஆலோசனை வழங்குவதும், கண்டிப்பதும் ஊடக சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் விடுக்கப்பட்ட மரண அடியாகும். ஊடகத்தைக் கண்டித்து அறிவுரை வழங்குவதை தவிர்க்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் கேட்டுக் கொள்கிறேன். ஊடகங்களின் கட்டுப்பாடு, சுயநிர்வாகம் என்பன ஊடகங்களுக்கே உரித்தான வேலை.” - என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டிருக்கின்றார்.

உண்மைதான். ஊடகங்கள் நெறிமுறையாக - சரியாக - சட்டத்தின் பிரகாரம் - நீதி, நேர்மையுடன் - தார்மீகப் பொறுப்புடன் - இயங்குகின்றனவா என்பது கண்காணிக்கப்பட வேண்டிய விடயம்தான்.

ஆனால் அதை அரசு நேரடியாகத் தான் செய்யாமல், ஊடகக் கட்டமைப்புகள் மூலமே அதனை முன்னெடுப்பதுதான் பொருத்தமானதும் சரியானதும் ஆகும். அதையே சஜித் பிரேமதாஸவும் வலியுறுத்தி இருக்கின்றார்.

# த.வெ.க. தலைவர் விஜய்யின் அதிகாரப்பகிர்வு கருத்தை வரவேற்கின்றார் செல்வப்பெருந்தகை



“த.வெ.க. தலைவர் விஜய்யின் அதிகாரப்பகிர்வு கருத்தை வரவேற்கிறோம். இப்போது இண்டியா கூட்டணியில் இருக்கிறோம். இண்டியா கூட்டணியில் எந்த சலனமும், சங்கடமும் இல்லை,”

– இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் செல்வபெருந்தகை நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“த.வெ.க. தலைவர் விஜய்யின் அதிகாரப்பகிர்வு கருத்தை வரவேற்கிறோம். இப்போது இண்டியா கூட்டணியில் இருக்கிறோம். இண்டியா கூட்டணியில் எந்த சலனமும், சங்கடமும் இல்லை. 2004 முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியில் கூட்டணிக் கட்சிகளுக்கு அதிகாரப்பகிர்வு அளிக்கப்பட்டது. அதிகாரப்பகிர்வு குறித்த தொண்டர்களின் உணர்வுகளை கட்சி தலைமைக்கு கொண்டு செல்வோம்.

தமிழகத்தில் தை பிறந்தவுடன் காங்கிரஸ் கட்சிக்கு வழிபிறக்கும். தமிழகத்தில் வருங்காலங்களில் ஆட்சியில் பங்கு அளிப்பது குறித்து மக்கள் தான் முடிவு செய்வார்கள். தமிழகத்தில் பெருந்தலைவர் காமராஜர் கட்சி அமைய வேண்டும். அதை நோக்கிதான் எங்கள் பயணம் இருக்கும். ஒரே நாடு, ஒரே தேர்தல் முறையை மத்திய அரசு அமுல்படுத்தினால் நாட்டில் புரட்சி ஏற்படும்.”– என்றார்.

# சினிமாவில் பிரபலமாக இருந்தவர்களால் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது



சினிமாவில் பிரபலமாக இருந்தவர்கள் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது என்று எச்.ராஜா தெரிவித்துள்ளார்.

கும்பகோணம் ஒப்பிலியப்பன் கோயிலில் தமிழக பா.ஜ.க. ஒருங்கிணைப்பு குழு தலைவர் எச்.ராஜா தனது குடும்பத்துடன் தரிசனம் மேற்கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

2014-2019 இல் பா.ஜ.கவிற்கு என அறுதிப்பெரும்பான்மை இருந்தும் கூட கூட்டணி கட்சிகளை ஆட்சியில் பங்கு பெறவைத்திருந்தோம். ஆட்சியில் பங்கு என்பது யார் பெயரைக் கூறி, யாருடன் கூட்டணி என வாக்கு சேகரித்து வெற்றி பெறுகிறமோ, அவர்களுக்கு ஆட்சியில் பங்களிக்க வைக்க வேண்டும்.

தி.மு.க. எப்போதுமே, ஒருவருடைய பெயரையும், அவர்களின் புகைப்படத்தை போஸ்ட்டரில் அச்சிட்டு, வாக்கு சேகரிப்பார்கள். ஆனால் தி.மு.க., அவர்களை உள்ளே உட்கார அனுமதிக்காமல் வெளியே போய்விடு என்பார்கள். பா.ஜ.க. அவர்களைப் போல் இல்லை. கூட்டணியோடு ஆட்சியில் இருப்பது தான் சரி.

நடிப்பு என்றால் நடிகர் சிவாஜி தான். அவருக்கு சமமாக நடிப்பதற்கு இன்று வரை யாரும் இல்லை. ஆனால் அவரால் அரசியலில் பரிணமிக்க முடியவில்லை. விஜயகாந்த் உள்பட எத்தனையோ நடிகர்கள் அரசியலுக்கு வந்துள்ளார்கள். சினிமா பிரபலமாக இருந்தோம் என்பதற்காக, அவர்கள் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நினைப்பது சரியல்ல என்பதைத் தமிழக மக்கள் பலமுறை அவர்கள் அளித்த தீர்ப்பின் மூலம் சொல்லி உள்ளார்கள்.” - என்றார்.

# வரலாற்று நினைவுகளுடன் தமிழ்நாடு தினத்தை போற்றி மகிழ்வோம்: த.வெ.க. தலைவர் விஜய்

“தமிழர் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைக்கப் போராட்டம் நடத்திய எல்லைப் போராளிகளின் தியாகங்களை இன்னாளில் நினைவுகூர்வோம்.”

– இவ்வாறு தமிழ்நாடு தினத்துக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவு,

“1956 இல் மொழிவாரி மாகாணங்கள் அமைக்கப்பட்டதன் மூலம், நம்முடைய மாநிலம் நிலப்பரப்பு அளவில், தனி மாநிலமாக உருவெடுத்த தினமே நவம்பர் 1. மதராஸ் மாகாணமாக இருந்த நமது மாநிலத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டக் கோரி, தியாகி சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் இருந்து உயிரும் துறந்தார். இதைத் தன் இதயத்தில் தாங்கிய, கனிவின் திருவுருவம் பேரறிஞர் அண்ணா, தான் ஆட்சிக்கு வந்ததும் சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றி, தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைக்கப் போராட்டம் நடத்திய எல்லைப் போராளிகளின் தியாகங்களை



இன்னாளில் நினைவுகூர்வோம். தியாகப் பெரும் பின்னணியில் தமிழர்களுக்கு என்று ஒரு தனி மாநிலம் பிறந்த இந்த நாளை (நவம்பர் 1) வரலாற்று நினைவுகளுடன் தமிழ்நாடு தினமாகப் போற்றி மகிழ்வோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.






# கனமழை காரணமாக வெள்ளக்காடானது ஸ்பெயின்: 150 இற்கும் மேற்பட்டோர் பலி, மீட்புப் பணி தீவிரம்

ஸ்பெயினில் பதிவான கனமழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி சுமார் 150 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் உடல்களை தேடும் பணியை ஸ்பெயின் முடுக்கிவிட்டுள்ளது. ஸ்பெயினின் மோசமான இயற்கை பேரிடர் பாதிப்புகளில் இது ஒன்று எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுவும் வெள்ளத்தில் சேதமடைந்த வீடுகள் மற்றும் கார்களில் உயிரிழந்தவர்களின் உடல்கள் உள்ளனவா என தேடும் சவாலநிலை அங்கு நிலவுகிறது. அந்த நாட்டின் கிழக்கு வலேன்சியா பகுதியில் மட்டும் 155 பேர் உயிரிழந்துள்ளனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது. சுனாமி பேரலைகள் ஏற்படுத்தும் பாதிப்பை விடவும் இது அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மற்றும் புதன்கிழமை ஸ்பெயினில் கனமழை பொழிந்தது. இதில் கிழக்கு வலேன்சியா பகுதி மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் சாய்ந்த மின்கம்பங்கள், வேரோடு சாய்ந்த மரங்கள், சேறும் சகதியுமான வீதிகள் மற்றும் வீடுகள், ஒன்றான மீது ஒன்றாக நின்ற கார்கள் என்று திரும்பும் பக்கமெல்லாம் சேதம். இதற்கு மத்தியில் தான் வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெள்ள பாதிப்பில் இருந்து உயிர் பிழைத்தவர்கள் தங்கள் உறவுகளை தேடிய சோகம் காண்பவர்களின் மனங்களை கலங்க செய்தது. பலர் மாயமாகி உள்ள காரணத்தால் அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

வெள்ள நீர் வீதிகளில் பெருக்கெடுத்து பாய்ந்த காரணத்தால் குடியிருப்பு பகுதிகள் அப்படியே நீரால் சூழ்ந்த பகுதி போல காட்சி அளிக்கின்றன. வீதிகள் மிதக்கும் கல்லறையாக மாறியதாக உள்ளூர் மக்கள் சொல்லியுள்ளனர். தெற்கு வலேன்சியா நகரின் தேசிய நெடுஞ்சாலை ஒன்றில் வெள்ளத்தில் சிக்கிய கார்களில் இருந்தவர்களை வெல்டரான லூயிஸ் சான்செஸ் என்பவர் பத்திரமாக மீட்டுள்ளார்.

“மீட்பு படையினர் மூத்த குடிமக்களை தான் மீட்டனர். நான் உள்ளூர் வாசி என்பதால் என்னால் முடிந்தவர்களை மீட்டேன். சில உடல்கள் நீரில் அடித்துச் சென்றதை நான் பார்த்தேன். வெள்ளத்தில் சிக்கிய மக்கள் செய்வதறியாமல் கலங்கி நின்றனர்” என அந்த சூழலை லூயிஸ் விவரிக்கிறார்.

வெள்ளத்தில் சிக்கியவர்களை ஹெலிகாப்டர் மூலமாகவும் ஸ்பெயின் இராணுவம் மீட்டது. சுமார் 70 பேரை இப்படி மீட்டதாக தகவல் கிடைத்துள்ளது. மீட்கப்பட்டவர்கள் மொட்டை மாடி மற்றும் கார்களில் சிக்கி இருந்தவர்கள். தரைவழியாக வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதியை புதன்கிழமை அன்று அணுக முடியாத சூழலை இராணுவம் எதிர்கொண்டது. தற்போது அங்கு வீடு வீடாக இராணுவத்தினர் மீட்பு பணியை மேற்கொண்டுள்ளனர்.








# கமலா ஹாரிஸூம், பைடனும் இந்துக்களை புறக்கணித்தனர்

## டொனால்ட் ட்ரம்ப் குற்றச்சாட்டு

“கமலா ஹாரிஸூம், ஜோ பைடனும் அமெரிக்கா மற்றும் உலகம் முழுவதும் உள்ள இந்துக்களை நிராகரித்து விட்டனர். எனது நிர்வாகத்தின் கீழ், இந்தியாவுடனும் எனது நல்ல நண்பருமான பிரதமர் மோடியுடனான நமது சிறந்த கூட்டாண்மையையும் வலுப்படுத்துவோம.”

– இவ்வாறு டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் கருத்து தெரிவிக்கையில்,

“வபங்களாதேஷில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் கொள்ளை சம்பவங்களை நான் வன்மையாக கண்டிக்கிறேன். அந்த நாட்டில் இன்னும் ஒரு குழப்பமான நிலை நீடிக்கிறது.


நான் இருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது. கமலா ஹாரிஸூம், ஜோ பைடனும் அமெரிக்கா மற்றும் உலகம் முழுவதும் உள்ள இந்துக்களை நிராகரித்து விட்டனர். இஸ்ரேல், உக்ரைன் முதல் நம்முடைய தெற்கு எல்லை வரை அவர்கள் மிக மோசமாக நடந்துகொண்டிருக்கின்றனர். ஆனால் நாங்கள் மீண்டும் அமெரிக்காவை வலிமையான நாடாக மாற்றி, அமைதியை கொண்டு வருவோம்.

தீவிர இடதுசாரிகளின் மத எதிர்ப்பு கொள்கையை எதிர்த்து இந்து அமெரிக்கர்களையும் பாதுகாப்போம். உங்கள் சுதந்திரத்துக்காக நாங்கள் போராடுவோம். எனது நிர்வாகத்தின் கீழ், இந்தியாவுடனும், எனது நல்ல நண்பருமான பிரதமர் மோடியுடனும் நமது சிறந்த கூட்டாண்மையையும் வலுப்படுத்துவோம்.

கமலா ஹாரிஸ் உங்கள் சிறு வியாபாரங்களை அதிக கட்டுப்பாடுகள் மற்றும் அதிக வரிகளின் மூலம் அழித்துவிடுவார். இதற்கு நேர்மாறாக, நான் வரிகளை குறைத்தேன். கட்டுப்பாடுகளை குறைத்தேன். வரலாற்றில் மிகப்பெரிய பொருளாதாரத்தை உருவாக்கினேன். நாங்கள் அதை மீண்டும் செய்வோம், முன்னெப்போதையும் விட பெரியதாகவும் சிறப்பாகவும் செய்வோம். மேலும் அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக மாற்றுவோம்.

அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துகள். இந்த தீபத் திருவிழா தீமையை அழித்து நன்மையின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்று நம்புகிறேன்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.







# போலி இலக்கத்தகட்டுடன் ஜீப்பொன்று கண்டுபிடிப்பு

கண்டி – தெல்தெனிய பகுதியில் போலி இலக்கத்தகட்டுடன் ஜீப்பொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், மேற்படி வாகனம் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொன்டெரோ ரகத்தை சேர்ந்த குறித்த ஜீப்பின் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றுமொரு வாகனம் இருப்பதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதற்கமைய போலி இலக்கத்தகடு பொருத்தப்பட்ட குறித்த ஜீப்பின் உரிமையாளரை தேடி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# 16 லட்சத்தைக் கடந்த சுற்றுலாப் பயணிகள்

இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் நாட்டிற்குப் பிரவேசித்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 16 லட்சத்தைக் கடந்துள்ளது.

இதன்படி, நாட்டை வந்தடைந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,601, 949 ஆகும் எனச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தின் நிறைவடைந்த 27 நாள்களில் மாத்திரம் 117, 141 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானோர் இந்தியா, பிரித்தானியா, ஜேர்மன், சீனா, ரஷ்யா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்தே வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# பல பகுதிகளுக்கு மின்னல் எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளுக்கு மின்னல் தாக்கம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, ஊவா, கிழக்கு, மத்திய, வடமத்திய, சபரகமுவ மற்றும் வடக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும்



இவ்வாறு மின்னல் தாக்கம் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது.

மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை தவிர்த்து கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுத்துக்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.




# நாட்டரிசி விலையை அதிகரிக்கக் கோரிக்கை

நாட்டரிசி கிலோவொன்றுக்கான கட்டுப்பாட்டு விலையை 240 ரூபாயாக அதிகரிக்க வேண்டும் என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.

ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் மற்றும் வர்த்தகர் களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டு மாயின் அரிசி விலையை அதிகரிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டரிசி கிலோவொன்று தற்போது 220 ரூபாவிற்கு விற்பனை செய்யப் படுகின்றது.



# ரதெல்ல குறுக்கு வீதி விபத்தில் ஒருவர் மரணம் 19 பேர் காயம்

நுவரெலியா– நானுஓயா, ரதெல்ல குறுக்கு வீதியில் நேற்று மாகை இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயி ரிழந்தார், 19 பேர் வரை காயமடைந் துள்ளனர்.

வான் ஒன்றும் லொறி ஒன்றும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ள தாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள னர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெ டுத்துள்ளனர்.



# சமூக நலன்புரிப் பலன்களை வழங்கும் திட்டங்களை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பில் கலந்துரையாடல்

நாட்டில் முன்னெடுக்கப்படும் சமூக நலன்புரிப் பலன்களை வழங்கும் வேலைத்திட்டங்களை டிஜிட்டல் மய மாக்குவது தொடர்பான கலந்துரை யாடல் நேற்று பிற்பகல் ஜனாதி பதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் இடம்பெற்றது.



அரிசி விலையை ஸ்திரப்படுத்தல் மற்றும் அரிசி தட்டுப்பாட்டுக்கு நீண்ட கால தீர்வு காண்பதற்கு நெல் களஞ்சிய கட்டமைப்பை டிஜிட்டல் மயமாக்குவதன் முக்கியத்துவம் மற்றும் அஸ்வெசும மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சமூக நலன்புரித் திட்டங்கள் உள்ளிட்ட சேவைகளை டிஜிட்டல் மயமாக்குதல் குறித்து இக் கலந்துரையாடலில் கவனம் செலுத் தப்பட்டது.

எதிர்வரும் புதிய பாடசாலை தவ ணையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படவுள்ள நிவாரண விநி யோகத் திட்டம் மற்றும் உர மானியத் திட்டம் என்பவற்றை டிஜிட்டல் மய மாக்குவது குறித்தும் இதன்போது கலந் துரையாடப்பட்டது.

டயலொக் ஆசியாடா தனியார் நிறுவ னத்தின் குழும பிரதான நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க, மிலேனி யம் ஐவு நிறுவனத்தின் பிரதம தொழில் நுட்ப அதிகாரி மகேஷ் விஜேநாயக்க உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் குழுவும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# அரச நிறுவனங்களில் நியமனம், இடமாற்றம் தேர்தல் சமயம் அனுமதியின்றிச் செய்யாதீர்!

## தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் அறிவுறுத்தல்

அரச நிறுவனங்களில் ஏதேனும் நியமனம் மற்றும் இடமாற்றம் செய்வ தற்கு முன்னர் விசாரணையொன்றை நடத்துமாறு அனைத்து நிறுவனங் களின் தலைவர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் அறிவித் துள்ளது.

தேர்தல் காலத்தில் குறிப்பிட்ட சில நிய மனங்கள் இடம்பெற்றன எனஜ் கிடைத்த தகவலையடுத்து ஆணைக்குழு இந்த அறிவித்தலை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், தேர்தல்




நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களை மேற்கொள் வது சட்டவிரோதமானது என்றும் அவ்வாறு நடந்திருந்தால் அது குறித்து விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஒரு நிறுவனத்திற்கு தவிசாள ரையோ அல்லது தலைவரையோ நியமிக்க வேண்டும் என்றால் அதற்கு எந்த தடையும் இல்லை, ஆனால் அது குறித்து ஆணைக்குழுவுக்கு முன்கூட் டியே தெரிவித்து தேவையான நடவ டிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், தேர்தல்களை பாதிக்கும் நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் தவிர வேறு நியமனங் களுக்கும் இடமாற்றங்களுக்கும் ஆணைக்குழு அனுமதிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 02.11.2024

## மேஷம்

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை.இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.

## ரிஷபம்

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.

## மிதுனம்

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடவேண்டும்.அது உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். அதே சமயத்தில் வேலையின் தொடக்கத்தில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. துணையிடம் அன்பான உரையாடல்களில் ஈடுபடலாம்.

உங்கள் தேவைகளுக்கு கடன் வாங்க நேரலாம். அதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படலாம். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உணவு முறை மேற்கொள்ளவும்.

## கடகம்

இன்று நீங்கள் சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள்.பொறுப்புகள் காணப்படும்.இன்று செய்யும் செயல்களை சரியாக திட்டமிட்டுச் செய்தால் நீங்கள் வெற்றி காணலாம்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாளாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் துணையிடம் உங்கள் நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கிய பிரச்சினை காணப்படும். அதற்காக செலவு செய்ய நேரும்.

## சிம்மம்

இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும்.குழப்பங்களும் கவலைகளும் நிறைந்திருக்கும்.இன்று சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு உகந்த நாள் அன்று.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணி நிமித்தமான பயணம் இன்று காணப்படும். உங்கள் வேலைகளை திட்டமிடுவது இன்று முக்கியம்.

இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுபடுத்த வேண்டும்.

நிதி நிலைமை நீங்கள் எதிர்பார்த்தது போலன்றி எதிர்மறையான பலன்களைத் தரும்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக உங்களுக்கு கால் வலி ஏற்படலாம்.

## கன்னி

இன்று சாதகமான நாள்.உங்களின் முயற்சி சிறியதாக இருந்தாலும் வெற்றி காண்பீர்கள்.உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## துலாம்

இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று பணியில் சவால்களும் போட்டிகளும் நிறைந்து காணப்படும்.இந்த சவால்களை திறமையாக சமாளிக்க வேண்டிய நிலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்வது நல்லது.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். புதிய முயற்சிகள் எடுத்து அதில் வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மன நிலையில் இருப்பீர்கள்.

இன்று பணி நிமித்தமான பயணம் காணப்படும். உங்கள் பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விடாப்பிடியான எண்ணம் கொண்டு எந்த முயற்சியும் செய்யாதீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உறவில் நல்லிணக்கம் இருக்கும்.

இன்று அதிர்ஷ்டம் காணப்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உணவில் கவனம் செலுத்த வேண்டும். உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.11.2024




இன்று மந்தமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாளாக அமையாது. முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தள்ளிப் போட வேண்டும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டத் தக்க வகையில் இருக்காது. பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்ளவும். இதனால் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைக்க முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. இன்று வரவும் செலவும் சேர்ந்து காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்ற உங்கள் ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள். இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் காணப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று காதலில் முழு திருப்தி உண்டாவதற்கு உகந்த நாள். இன்று காதலில் புதிய அத்தியாயத்தை தொடங்குவீர்கள்.

நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால் இன்று அதிக லாபம் கிடைக்கும்.

நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். உடற்பயிற்சி மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியையும் மன ஆறுதலையும் தரும்.

பணி நிமித்தமான பயணங்கள் இன்று காணப்படும். பணியில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு பொருத்தமான நாளாக உணர்வீர்கள். உங்கள் காதலை உங்கள் தந்தையிடம் கூறுவீர்கள். அது உங்களுக்கு சாதககமாக இருக்கும்.

ஏழைகளுக்கு தொண்டு செய்து அவர்கள் ஆசி பெறுவதன் மூலம் உங்களுக்கு நற்பலன்கள் கிடைக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.





